**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 191 /2023**

**Deposition of P.W.** 9

Name : திரு. சுதேசன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 21.01.2026

A1 Present. A2 absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது திருநெல்வேலி சரக தனிபிரிவு குற்றபுலனாய்வுதுறை உதவி காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு தக்கலை காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றிய போது 21.03.2021ம் தேதி தக்கலை காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. அருளப்பன் என்பரால் பதியப்பட்ட தக்கலை காவல்நிலைய குற்ற எண். 158/2021 பிரிவிகள் 294(பி). 341, 353, இ.த.ச மற்றும் 3 (1) தமிழ்நாடு பொதுசொத்துக்களை சேதப்படுத்தும் தடை சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே தேதியில் இரவு 10.47 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அனிஷ், ஆல்பா ஆகியவர்கள் முன்பாக அங்கு எரிந்து

கொண்டிருந்த உயர்கோபுர மின்விளக்கு வெளிச்சத்தில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5, பின்னர் அதே சாட்சிகள் முன்பாக சம்பவ இடத்தில் சம்பவத்தில் உள்ள எஸ்.கே.மலரகம் முன்பாக ரோட்டில் உடைந்த நிலையில் கிடந்த சோனி கேமரா மற்றும் உடைந்த செல்போன் ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6. பின்னர் சாட்சிகள் அபிலாஸ், ஸ்டீபன், அனிஷ், தங்கராஜ் ஆல்பா, அருளப்பன் ஆகியவர்களை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த சம்பவத்தில் ஈடுபட்டிருந்த எதிரிகளை தேடி வரும் போது 22.03.2021ம் தேதி இரவு 01.00 மணியளவில் முளகுமூடு பஸ் ஸ்டாப்பில் வைத்து எதிரி செல்லத்துரை என்பவரை கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் உடைந்த நிலையில் காணப்பட்ட கேமராவை சேத மதிப்பீட்டை கணக்கிடுவதற்காக மார்த்தாண்டத்தில் கேமரா சேல்ஸ் மற்றும் சர்வீஸ் கடை வைத்திருந்த விஷ்னு என்பவரிடம் சேதமதிப்பீட்டை கணக்கிட்டு சேதமதிப்பு சான்று கொடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். படிவம் 95 மூலம் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 95 அ.சா.ஆ.7. உடைந்த செல்போன் சா.பொ.2. பின்னர் எனக்கு பணி மாறுதல் உத்தரவு வந்த படியால் அந்த வழக்கு கோப்பை தக்கலை காவல்நிலையத்தில் ஒப்படைத்து விட்டு நான் பணி மாறுதலில் சென்றேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எஸ்.கே மலரகம் பூக்கடை சந்திப்பிலிருந்து 200 மீட்டர் தூரம்

இருக்கும் என்றால் 200 அடி தூரம் இருக்கும். அ.சா.1யிடம் பூதப்பாண்டி வேளாண்மை அதிகாரி என்பதற்கு நான் சான்று வாங்கவில்லை. அ.சா.1 தேர்தல் பிரச்சாரத்திற்கு அரசாங்க பணியில் அமர்த்தப்பட்டதை காட்ட ஆவணம் பெறவில்லை. கோப்புகளிலிருந்து அ.சா.1 அரசு ஊழியர் என்றோ சம்பவ நாளன்று பூக்கடை பகுதியில் தேர்தல் பணிக்கு அமர்த்தப்பட்ட விபரம் துலங்காது என்றால் சரியல்ல. புகாரில் குறிப்பிட்டுள்ளார். அ.சா.2 என்னிடம் கேமராவை எதிரிகள் காம்பவுண்ட் சுவருக்கு அப்பால் எறிந்ததாகவும் அதை நான் காம்பவுண்ட் சுவருக்குள் சென்று கைப்பற்றியதாகவும் வாக்குமூலம் கொடுக்கவில்லை. கேமராவை காம்பவுண்ட் சுவருக்குள் இருந்து கைப்பற்றவில்லை. அ.சா.1 என்னிடம் சம்பவ சமயம் மின்சாரம் இல்லை என்று கூறவில்லை. அ.சா.2 என்னிடம் சம்பவம் நடக்கும் போது மின்சாரம் இருந்தது, எதிரிகள் கிளம்பும் போது மின்சாரம் இல்லை என்று கூறவில்லை. அ.சா.1–க்கும், எதிரிகளுக்கும் இதற்கு முன்பு பழக்கம் இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அ.சா.1–க்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை தெரியாது என்றால் சரிதான். எதிரிகளின் பெயர்களை விசாரித்து தெரிந்து கொண்டதாக அ.சா.1 கூறியுள்ளார் என்றால் சரிதான். புகாரில் கேமரா Sony NX5 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் சம்பவ இடத்தில் Sony HXR –NX5P என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். படிவம் 91ல் Sony NXCAM என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட வீடியோ கேமரா Sony NX என்றால் சரிதான். மூன்றும் வெவ்வேறு வகையான வீடியோ கேமராக்கள் என்றால் சரியல்ல. ஒரே கேமராவில் குறிப்பிடப்பட்டிருந்த பெயர்களை

தான் குறிப்பிட்டுள்ளோம். அத்தாட்சியில் மோட்டரோளா 5 G Mobile Phone ன் பாகங்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. (போலீசாரின் நாட்குறிப்பில் உடைந்த மோட்டரோளா 5 G Mobile Phone ன் பாகங்கள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்நீதிமன்றத்தில் உள்ள அத்தாட்சியில் உடைந்த செல்போனின் பாகங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது) நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட அத்தாட்சியில் முழுவதும் உடைந்த செல்போன், உடைந்த டிஸ்பிளே பேனல் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். படிவம் 95ல் உடைக்கப்பட்ட செல்போன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட செல்போன் மோட்டரோளா போன் அல்ல என்றும் வேறு போன் என்று சொன்னால் சரியல்ல. சா.பொ.2 ஐ பார்க்கும் போது மோட்டரோளா போன் என்று துலங்காது என்றால் சரியல்ல. புகார்தாரர் புகாரில் குறிப்பிட்டுள்ளதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளோம். ஆனால் போனை நேரடியாக பார்த்தால் அது மோட்டரோளா போன் என்று தெரியாது. எதன் அடிப்படையில் மோட்டரோளா 5 G என்று குறிப்பிட்டோம் என்றால் புகாரின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டேன். கைப்பற்றும் போது அது மோட்டரோளா போன் என்று உறுதிபடுத்தினனா என்றால் இல்லை. படிவம் 91 – 22.03.2021ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 24 மணி நேர இடைவெளியில் தான் கேமராவை சேதமதிப்பு பெற அனுப்பினோம் என்றால் சரியல்ல. அதே நாள் அதே சமயத்தில் எதிரிகள் மீது குற்ற எண்.159/2021 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் வேறு சில எதிரிகளையும் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ளது. 21.03.2021ம் தேதி மாலை சான்று பொருட்களை

கைப்பற்றினேன் என்றால் சரியல்ல. அ.சா.5 என்னிடம் 21.03.2021ம் தேதி மாலை 06.00 மணிக்கு பூக்கடை சந்திப்பில் நின்று கொண்டிருந்த போது தக்கலை போலீசார் விசாரித்ததாக கூறவில்லை. அ.சா.5 மற்றும் அ.சா.6 காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக என்னிடம் கூறவில்லை. அ.சா.6 என்னிடம் 21.03.2021ம் தேதி மாலை 05.00 மணிக்கு பார்வைமகஜரில் கையொப்பம் செய்ததாக கூறவில்லை. அ.சா.1 அரசு பணி தொடர்பாக பூக்கடைக்கு செல்லவில்லை என்றும், எதிரிகள் செல்போன் மற்றும் கேமராவை உடைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அரசியல் உள்நோக்கத்தால் உயரதிகாரிகளின் தூண்டுதலால் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.